னேஷன்' ஏற்படுத்தி, அதற்கு இதைத் துணைத் தொழிலாக்கி, நட்டு, போல்டு மாதிரி சப்ளை செய்யக்கூடியதாக அமைத்து, பல பெரும் தொழில்களுக்கு இந்தச் சிறு தொழில்களை, உப-தொழில்களாக்க வழி வகைகளை அரசு செயல் படுத்தி, கால் கோலிவிடுமானால் இந்தத் துறை செம்மையாகப் பயன் தருமென் பதை அரசு உணர்ந்து, அந்த நெறியிலே செயல்படுமாவென்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, அதைத்தான் இப்போது செய்து வருவதாக விளக்கிச் சொன்னேன். ஆங்காங்கே பெரிய தொழிற் சாலைகள் இருக்கின்றன. திருச்சியில் ஹெவி பாய்லர் தொழிற்சாலை இருக் கிறது. அதற்குப் பக்கத்திலே ஒரு இன்டஸ்டிரியல் எஸ்டேட்டை உருவாக்கி யிருக்கின்றோம். அங்கே தொழில் செய்ய முன்வருபவர்களுக்கு அந்த வசதிகள் செய்து கொடுக்கின்றோம். அதே போல அம்பத்தூரில் செய்கிறோம். இப்படிப் பெரிய தொழிற்சாலைகள் இருக்கிற இடங்களில் எளிதாக முடிந்து விடுகிறது. ஆனால் பரவலாக இருக்கும் தொழிற்சாலைகளுக்குத் தான் தனி யாக ஒரு திட்டம் போட்டு எல்லாத் தொழில் அதிபர்களையும் அழைத்து, அவர்களுடைய தேவைகளைக் கணித்தெடுத்து, நாமே இதற்கு 'பீசிபிள் ரிப்போர்ட்' தயாரித்து, அதை மத்திய அரசுக்கு அனுப்பியிருக்கிறோம். unempoyment scheme என்ற திட்டத்தின் அடிப்படையில் அவர்களின் உதவி கிடைத்தால், குறைந்தபட்சம் இன்ஜினியர்களுக்காவது சொந்தத் தொழில் கொடுத்துவிடலாமென்ற நம்பிக்கை இருந்து வருகிறது.

திரு. எல். பலராமன் : தலைவரவர்களே, இது போன்ற பயிற்சி பெற்ற நபர்கள் என்னென்ன தொழில்களைச் செய்யலாம் என்று அரசாங்கம் சிபாரிசு செய்கிறது என்று அறிய விரும்புகிறேன். இதற்கான மூலப் பொருள்கள் தமிழ் நாட்டிலே கிடைக்கின்றனவா ? இதற்குக் கொடுக்கக்கூடிய மான்யத்தை மத்திய சர்க்கார் வழங்குகிறதா, மாநில சர்க்கார் வழங்குகிறதா ? விவசாய சம்பந்தமான பயிற்சி பெற்ற பிறகு, டிராக்டர் போன்றவைகளுக்கு தமிழ் நாடு அரசாங்கம் என்ன உதவி செய்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இந்தத் திட்டத்தினைப் பொறுத்த வரையில், நம்முடைய பணம் தான் கொடுக்கப்படுகிறது. இதை நாம் சிறிய சிறிய பட்டரை வைக்கக் கொடுக்கிறோம். பணத்தைக் கொடுக்கும்போது அவர்களுக்கு 'டூல்ஸ்' அரசு வாங்கிக்கொடுக்கிறது.

Administrator-General of Tamil Nadu

* 35. *Q.*—THIRU M. ARUMUGASWAMI : Will the Hon. the Minister for Industries be pleased to state the number of trusts now administered by the Administrator-General of this State?

தலைமை நிர்வாக அதிகாரி, தமிழ்நாடு

திரு. எம். ஆறுமுகசாமி : மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

இம்மாநிலத்தின் தலைமை நிர்வாக அதிகாரியால் தற்போது எத்தனை அறக்கட்டளைகள் நிர்வகிக்கப்படுகின்றன ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அரசுப் பொறுப்புச் சொத்தின் ஆட்சியாளர் அவர்களால் தற்போது நிர்வகிக்கப்பட்டு வரும் டிரஸ்டுகளின் எண்ணிக்கை 145 ஆகும்.

திரு. எம். ராஜா அய்யர் : இந்த அறக்கட்டளைகளின் மூலதனம் எல்லாம் கட்டாயமாக இங்குதான் இருக்கவேண்டுமென்று நிபந்தனை ஏதாவது இருக்கின்றதா ? அல்லது எந்த வங்கியிலும் மூலதனத்தைப் போடலாமா ? ஏனென்றால் அரசாங்கத்தில் இந்த மூலதனத்தைக் கொடுத்தால், மிகக் குறைவான வட்டி கொடுக்கப்படுகிறது. பிற வங்கிகளில் அந்த மூலதனத்தைக் கொடுத்து அறக்கட்டளையை ஏற்படுத்தினாலும், அதையும் இந்த நிர்வாக அதிகாரி அவர்களுடைய நிர்வாகத்திற்குள்ளே ஏற்றுக்கொள்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இது உயர்நீதி மன்றங்கள் நிர்வகிக்கின்ற பொறுப்பாகும். எதெதற்கு அந்தப் பணத்தை இன்வெஸ்ட்மென்ட் செய்கிறார்கள் என்ற விவரம் இல்லை.

Raids on Cinema Houses

* 28. Q.—THIRU V. ISVARMURTI (on behalf of THIRU S. VELLAPANDIAN) : Will the Hon. the Minister for Revenue be pleased to state the details of the raid conducted by the officials of the Commercial Taxes Department on Cinema Houses in Madras City during March and April 1972?

திரைப்பட அரங்குகளில் திடீர்ச் சோதனைகள்

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி (திரு. எஸ். வெள்ளபாண்டியன் சார்பில்) : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

சென்னை மாநகரில், 1972, மார்ச்-ஏப்ரல் திங்களில், திரைப்பட அரங்குகளில் வணிக வரித் துறை அதிகாரிகள் நடத்திய திடீர்ச் சோதனைகளின் விவரங்கள் யாவை ?